(Sec Rule 42)
DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII, Cr.P.C.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-
JUDICIAL MAGISTRATE,SRIRANGAM.

| | | |
|---|---|---|
| Calendar | () | |
| Miscellaneous | () | Case No.CC No. 37/2019 |
| Preliminary Register | () | |
| Sessions | () | |

Depositions of …… witness for Prosecution **PW 4**
Defence
Court

Name .. Tr.Chinnaraj
S/o. .. Tr. Murugan
Village ..
Taluk ..
Caste ..
Calling ..
Religion ..
Age .. 29

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, (Central Act 44 of 1969) on the 21 th day of December 2021.

**நான் திருவாணைக்கோவிலில் வசிக்கிறேன். நான் ஓட்டுனராக உள்ளேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான் . சுமார் 3 வருடங்களுக்கு முன்பு நான் வீட்டிற்கு சாப்பிட சென்ற போது போலீசார் என்னிடம் கையெழுத்து கேட்டனர் எதற்காக என்று தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியும் . சுப்பிரமணியன் மகனான அ .சா.1. நவநீதகிருஷ்ணனை தெரியும் .. நாங்கள் ஒரே பகுதியில் வசிப்பவர்கள் . பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து அ .சா.ஆ.2 ஆகும். கைப்பற்றுதல்மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து அ .சா.ஆ.3 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.**

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை..**

**நான் போலீசார் விசாரணையில் கடந்த 19.01.2018 ம் தேதியன்று ஸ்ரீரங்கம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற எண். 57/2018 இதச பிரிவுகள் 294 பி, 324,வழக்கில்**

WEB COPY

சம்பவ இடத்தை என் முன்பாக பார்வையிட்ட பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தததாகவும் அதில் நானும் என்னுடன் பாபு என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தததாகவும் அதனைத் தொடர்ந்து அன்றைய தினமே எங்கள் முன்னிலையில் 11.00 மணிக்கு வழக்கின் தடய பொருளான சுமார் 2 அடி நீளமுள்ள கட்டான் ஒன்றினை உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தில் கைப்பற்றியதாகவும் அதில் நானும் , பாபுவும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் நான் சமாதானமாக போய்விட்டதாலும் , எதிரிகள் என் ஊர்க்காரர்கள் என்பதாலும் அவர்களை இந்த குற்றவழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டி உண்மைக்கு மாறாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மறு விசாரணை இல்லை.

Recorded from the witness
Taken down on my dictation, read over
to him and accepted by him as correct and
made his signature

District Munsif – Cum - Judicial Magistrate
**Srirangam.**

WEB COPY